உ

செந்திலாண்டவன் [illegible]

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச் செய்த

திருவாசகம் - திருச்சாழல்

[G. U. போப் ஆங்கிலத்துடன் கூடியது]

ஸ்ரீ-ல-ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள்

269-ம் ஆண்டு நினைவு மலர்

16—5—1957

★

ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

திருமுறை வெளியீடுகள்

		ரூ.	ந.பை
1	விநாயகர் திருமுறை	0	6
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு—டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் ...	6	0
3	திருஞான சம்பந்தர் தேவாரம் ...	2	50
4	திருநாவுக்கரசர் தேவாரம் ...	2	25
5	சுந்தரர் தேவாரம் ...	1	0
6	திருவாசகம் ...	0	37
7	திருக்கோவையார்-பேராசிரியர் உரை	2	0
8	ஒன்பதாம் திருமுறை-திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ...	0	50
9	திருமந்திரம் ...	1	50
10	பதினோராந் திருமுறை ...	1	25
11	அம்மையார்-அற்புதத் திருவந்தாதி ...	0	25
12	திருக்கைலாய ஞானவுலா ...	0	50
13	பெரிய புராணம் ...	2	50
14	அகத்தியர்தேவாரத்திரட்டு ...	0	37
15	திருவிளையாடற் புராணம் ...	3	0
16	தாயுமானசுவாமிகள் பாடல் ...	1	25
17	கந்தபுராணச் சுருக்கம் ...	1	75
18	கந்தபுராணம்-முதல் மூன்று காண்டங்கள் ஆராய்ச்சிக்குறிப்புடன் ...	2	75
19	ஷை யுத்தகாண்டம், தேவகாண்டங்கள் ஆராய்ச்சிக் குறிப்புடன் ...	1	75
20	ஷை தக்ஷகாண்டம்-குறிப்புரை— ஆராய்ச்சிக் குறிப்புடன் ...	1	50

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து வெளியீடு

உ 7

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

திருவாசகம்-திருச்சாழல்

[G. U. போப் ஆங்கிலத்துடன்கூடியது]

★

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்

அவர்களுடைய திருவுளப்பாங்கின்படி

★

ஸ்ரீவைகுண்டம்

குமரகுருபரன் சங்கத் தலைவர்

திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A., B. L.,

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

ஏவிளம்பி ஆண்டு வைகாசித்திங்கள் 3-ம் நாள்

ஸ்ரீ காசிமடம் 1957 திருப்பனந்தாள்

முதற்பதிப்பு—1957

This book can be obtained free of cost from "Thiyagaraja Vilas Triplicane P. O., Madras-5" by sending 6 Naye Paise stamp to cover postage.

Siva Siva

PREFACE

Tiruchalal (திருச்சாழல்) is the 12th hymn in Tiruvachakam of Manickavachakar. This hymn consists of twenty stanzas and it is said that while at Chidambaram Sri Manickavachakar held a dispute with a Buddhist guru of Ceylon and won him by making the dumb daughter of the King of Ceylon speek and answer all the questions of the Buddhist monk. The first part of each stanze contain the objection raised by the Buddhist and the second part is the reply from the mouth of the daughter of the Ceylon King.

"Chalal is the name of a female playof which the verse is the accompaniment. In each stanza the former couplet, sung by the leader, propose some mystry regarding Sivan to which the latter couplet is a reply, sung in chorus by all maidens with much clapping of hands". This hymn was also very popular like Tiruvembavai and Tirupalli

Yeluchi, for we find that in the 17th year of Vikramachola, an endowment of land for daily requirement of the temple including **recitation of Tiruchalal** every Sunday was made at Elvanasur in the North Arcot District.

The Tamil text of Tiruchalal with the English translation from the pen of **Dr. G. U. Pope** is now published under the order of **H. H. Sriiasri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal**, Sri Kasi Mutt Tirupanandal and issued free of cost to the Tamil and English knowing public. to make the reader understand fully the purport of each mystery regarding Lord Siva.

I am indeed very grateful to His Holiness for having directed me to publish this hymn and I am also much indebted to Sri **T. Pattuswamy Othuvar** of Tiruchirapalli for the editorial work in this publication.

Srivaikuntam, 16–5–'57.

T. M. Kumaraguruparan Pillai,

B. A., B. L., VAKIL.

உ

Siva Siva

Tiruvachakam is classified as the 8th Tirumurai and it has the unique greatness of being written by the Holy Hand of Lord Siva. The saying, "He, who does not melt for *Tiruvachakam*, will not melt for any other *vachakam*" tells volumes of its greatness.

It was *Rev. G. U. Pope* who had the "ஆகூழ்" or the good fortune to translate Tiruvachakam into English and no doubt it was heartily welcomed by the English-knowing Tamils then. The revered author had indeed laboured hard to give correct rendering in English but as he was foreign to the customs and manners of the Tamils and also to their Philosophy he could not give accurate English renderings to some passages which may be overlooked.

My gratitude and reverence are due to His Holiness *Sri la Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal*, Sri Kasi Mutt, Tirupanandal for printing this booklet.

All Hail to the Lotus Feet of Lord Siva!

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் மதுரைக்கருகிலுள்ள திருவாதவூரில் அவதரித்தார்; இளமையில் கல்வியறிவு பெற்று நல்லொழுக்கின் தலைநின்றார்; அரிமர்த்தன பாண்டியனின் முதல் அமைச்சரானார்; அரசன் ஆணையால் கிழக் கடற்கரைக்குக் குதிரை வாங்கச் சென்றார்; திருப்பெருந்துறையில் குருமூர்த்தியாக எழுந்தருளி வந்த இறைவனிடம் ஞானோபதேசமும் **மாணிக்கவாசகர்** என்ற திருநாமமும் பெற்றார்; இறைபணியில் நின்றார்; பின்பு அரசனின் கோபத்திற்கு இலக்கானார். நரிகள் பரிகளானதையும், வைகை பெருகியதையும், இறைவன் பிரம்படி பட்டதையும் கண்ட பாண்டியன் வாதவூரரின் பெருமையை உணர்ந்து மன்னிப்பு வேண்டினான். வாதவூரர் அரசியலைத் துறந்து திருப்பெருந்துறை, உத்தரகோசமங்கை, திருவாரூர், திருவண்ணாமலை முதலிய சிவத்தலங்களை வணங்கிப் பதிகம்பாடி இறுதியில் தில்லை வந்தடைந்தார்; தம்மிடம் வாதுக்கு வந்த புத்தர்கள்முன் **ஊமைப் பெண்ணைப் பேசவைத்து** அவர்களை வென்றார்.

ஒருநாள் நடராஜப்பெருமான் அந்தணவடிவு கொண்டு மாணிக்கவாசகரிடம் வந்து **திருவாசகம், திருக்கோவையார்** இரண்டினையும் தாமே எழுதிக் கைச்சாத்திட்டுக் கனகசபையில் வைத்து மறைந்தருளினார். மாணிக்கவாசகர் ஆனி மகத்தில் இறைவனோடு இரண்டறக் கலந்தார்.

உ

சிவ சிவ

திருவாசகச் சிறப்பு

போதலர்ந்து தேன்சொரியும்
பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான்
வாசகத்தை — ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப்
பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.

— பழைய பாடல்

உ

சிவ சிவ

திருவாசக உண்மை

"முன்னாற் கலையுமுணா
ராமூகை யாமேடி
தன்னாற் பதிமுதன்மை
சாற்றியதாம் **திருச்சாழல்**"

—திருப்பெருந்துறைப் புராணம்

திருச்சாழல் - இது மகளிர் விளையாட்டினுள் ஒன்று என்பர்; இப்பகுதி ஊமைப் பெண்ணைக் கொண்டு சிவத்தினது முழுமுதற் றன்மையை மொழிந்தது; வினாவிடையாக அமைந்துள்ளது.

உ

சிவசிவ

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

திருச்சாழல்

[சிவனுடைய காருணியம் *]

தில்லையில் அருளியது

தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு
    பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயால்
    மறைபோலும்? காண், ஏடீ!
பூசுவதும், பேசுவதும்,
    பூண்பதுவும் கொண்டென்னை?
ஈசன் அவன், எவ்வுயிர்க்கும்
    இயல்பானான், சாழலோ!

---

* சிவனுடைய காருணியம் - சிவனது அருட்சத்தி விளையாட்டு.

The Sacred Caral* [1]

The sport of Civan's gracious Energy :

Objections to ashes, the snake and the mystery of His teaching.

Obj :—What He smears is 'White ash';
What He wears is an angry snake;
What He speaks with His life divine
is the mystic word, it seems;
My Dear !

Ans :—What He smears, what He says,
what He wears are the means
by which He,
As my Lord, rules me; and of all
that hath life the Essence is He!
Caralo ! $ 1

---

* சாழல் $ சாழலோ

1. These are the words used by Dakshan to his daughter Umai

அடலைமெய் பூசுவது அரவம் பூண்பது
கடல்விடம் உண்பது கபாலம் ஏந்துவது
உடல்பின நரைவிடை ஊர்வ தன்னவன்
றடவரல், வேள்வியின் வருதற் பாலனோ?

என்னப்பன் எம்பிரான்
எல்லார்க்கும் தானீசன் ;
துன்னம்பெய் கோவணமாக்
கொள்ளும்அது என் ? ஏடீ !
மன்னுகலை துன்னுபொருள்
மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச்
சாத்தினன்காண்,சாழலோ!

Objection to His mendicant guise.

Obj :—' My Father, Embiran, to all indeed
is ruler Supreme;
Yet He wears a clouted kovanam ;
and why should this be so,
My Dear ?

' His body he smears with ashes ; a serpent he
wears as adornment ;
Poison from the sea he eats ; a skull he carries ;
He rides a white bull that rages with anger,
Such an one
O damsel, is he fit to come to our sacrifice ?

Ans :—The Vedas four, the meaning with
which all lore is fraught, as the
great thread
Himself alone as kovanam He
spreads ; behold, Caralo! 2

கோயில் சுடுகாடு,
கொல்புலித்தோல் நல்ஆடை,
தாயுமிலி, தந்தையிலி,
தான் தனியன், காண்,ஏடீ !
தாயுமிலி, தந்தையிலி,
தான் தனியன்; ஆயிடினும்,
காயில், உலகனைத்தும்
கற்பொடி,காண்,சாழலோ !

The objection that Civan is a homeless ascetic.

Obj :—His shrine's the burning ground ;
fierce tiger skin His goodly garb ;
All motherless and fatherless is He ;
all lonely dwelleth ; see My Dear!

Ans.—Motherless is He and fatherless;
dwelleth all alone; but though
'tis thus.
If He be wroth, the worlds to powder
crumble all, behold, Caralo! 3

அயனை அனங்கனை
அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா
வடுச்செய்தான், காண்,ஏடீ!
நயனங்கள் மூன்றுடைய
நாயகனே தண்டித்தால்,
சயம்அன்றோ, வானவர்க்குத்
தாழ்குழலாய்? சாழலோ!

The punitive inflictions of Bhairavan.

Obj:—Ayan, the 'Bodiless', with Anthagan,
and Canthiran,
In divers ways He wounded sore,
yet slew not, see, My Dear!

Ans :—He Whose eyes are three, the Ruler great, if He shall punish,
Is't not a triumph to the heav'nly ones, O thou with flowing locks?
Caralo! 4

தக்கனையும் எச்சனையும்
தலைஅறுத்துத் தேவர்கணம்
தொக்கென வந்தவர்தம்மைத்
தொலைத்ததுதான், என்? ஏடீ!
தொக்கெனவந் தவர்தம்மைத்
தொலைத்தருளி அருள்கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற்று
அருளினன், காண்,சாழலோ!

Dakshan's sacrifice.

Obj :—Of Dakshan He smote off the head, off Eccan too; the hosts of gods
That flocking came He sent to nothingness; Why this, My Dear?

Ans :—Them Who thronging came to nothingness He sent, 'twas grace!
In grace to Eccan too He gave one head the more; see Caralo! 5

அலரவனும் மாலவனும்
அறியாமே அழல்உருவாய்
நிலமுதற்கீழ் அண்டம்உற
நின்றதுதான், என், ஏடீ?
நிலமுதற்கீழ் அண்டம்உற
நின்றிலனேல் இருவரும்தம்
சலமுகத்தால் ஆங்காரம்
தவிரார்காண், சாழலோ !

Arunachalam.

Obj :—Him the flow'ry god and Mal
knew not; in fiery form He came
From earth that stretch'd to lower
worlds; wherefore was this,
My Dear?

Ans :—From earth to realms beneath
had He not reach'd, they twain
The insolence of self-esteem had not
cast off; behold, Caralo! 6

மலைமகளை ஒருபாகம்
வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையில்
பாயும்அது, என் ? ஏடீ !
சலமுகத்தால் அவன்சடையில்
பாய்ந்திலளேல் தரணிஎல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து
பெருங்கேடாம்,சாழலோ !

Parvathi lives in His side, Ganga on His crest.

Obj :—Soon as the mountain maid as part of
Him He placed, another dame
In watery form upon His braided
locks poured down ! Why this
My Dear ?

Ans :—Upon His braided locks in watery
form had she not leaped,
the world
To cavernous destruction rushing
ruined must have lain ! Caralo ? 7

கோலாலம் ஆகிக்
குரைகடல்வாய் அன்றெழுந்த
ஆலாலம் உண்டான்
அவன்சதிர்தான் என்?ஏடீ !
ஆலாலம் உண்டிலனேல்
அன்றயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவர்எல்லாம்
வீடுவர்காண், சாழலோ !

The poison.

Obj :—He ate halalam from the sounding sea,
that day arisen
With mighty din ; what means this
wondrous act, My Dear ?

Ans :—Had He not eaten on that day
the poison fierce, Ayan and Mal
And all the other gods of upper
heaven had died ; behold, Caralo ! 8

தென்பால் உகந்தாடும்
    தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான்
    பெரும்பித்தன், காண்,ஏடீ !
பெண்பால் உகந்திலனேல்
    பேதாய்! இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி
    வீடுவர்,காண்,சாழலோ !

Obj :—The Lord of Tillai's court, Who in
the southern land delights,
and dances there,
A mighty maniac, delighted in the
female form, behold. My Dear!

Ans :—Had He not delighted in the female
form, all in the wide World
Would have obtained heaven's bliss
and earth had failed behold, Caralo! 9

தானந்தம் இல்லான்
தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து
அழுத்துவித்தான் காண்,ஏடீ !
ஆனந்த வெள்ளத்து
அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர்
வான்பொருள்காண், சாழலோ !

Obj:—He is the endless One, and me, a dog, who came to Him
He plunged in tide of rapturous bliss unending; behold, My Dear!

Ans:—The sacred Feet that plunged me in rapture's flowing tide
Are treasure rich to gods in upper heaven that dwell; behold, Caralo! 10

நங்காய்! இதென்ன தவம்?
நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோள்மேலே
காதலித்தான் காண்,ஏடீ ?
கங்காளம் ஆமாகேள்
காலாந்த ரத்திருவர்
தங்காலஞ் செய்யத்
தரித்தனன்காண்,சாழலோ !

Obj :—Lady ! What's this ascetic rite ?
Sinews and bone He wears,
A bony circlet on His arm He loves
to bear ; behold, My Dear !

Ans :—The way of the bony circlet hear !
In the end of the age
When the two had reached their
fated hour, He put it on ;
behold, Caralo ! 11

காஞர் புலித்தோல்
　　உடை;தலைஊண்; காடுபதி;
ஆனல் அவனுக்கிங்கு
　　ஆட்படுவார் ஆர்?ஏடீ !
ஆனலும் கேளாய்,
　　அயனுந் திருமாலும்
வானேர் கோவும்
　　வழியடியார், சாழலோ !

Obj :—His garb is the skin of the forest tiger;
He eats from a skull;
The wild is His city; to him here
who will service pay? My Dear!

Ans :—Yet, hear thou! Ayan and sacred Mal,
and the King
Of them of the heavenly land, are His
humble and faithful ones; Caralo! 12

மலையரையன் பொற்பாவை
வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான்
என்னுமது என்? ஏடீ!
உலகறியத் தீவேளாது
ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம்
கலங்கிடும்காண்; சாழலோ!

His marriage.

Obj :—The mountain monarch's golden
Daughter bright of brow, the Lady
blest,
He wedded with the fire as all the
world doth know; What's that?
say, My Dear!
Ans :—Had he not wedded Her for all the
world to know, the world entire
Had in confusion lost the import
true of every lore; behold, Caralo! 13

தேன்புக்க தண்பணைசூழ்
　　தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம்
　　பயிலுமது என்?ஏடீ!
தான்புக்கு நட்டம்
　　பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு
　　ஊட்டாம்,காண், சாழலோ!

The dance.

Obj :—The Lord of Tillai's Court, by cool
palms girt, whence honey drips,
There entering does a mystic dance
perform ; What's that, My Dear ?

Ans :—Had He not enter'd there, all the
wide earth had quick become
Abode of demons armed with flesh-
transfixing spears, Caralo ! 14

கடகரியும் பரிமாவும்
    தேரும்உகந் தேறாதே
இடபம்உகந் தேறியஆறு
    எனக்கறிய இயம்பு;ஏடீ !
தடமதில்கள் அவைமூன்றும்
    தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான்
    திருமால்,காண், சாழலோ !

The bull.

Obj :—On stately elephant, swift stead, or
    car it pleased Him not to ride;
A bull He pleased to mount! Explain
    me this that I may know, My Dear!

Ans :—The day He burnt with fire the
    triple mighty walls,
Mal divine a bull became to bear
    Him up; behold, Caralo! 15

நன்றாக நால்வருக்கும்
நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்கு
அறமுரைத்தான் காண்,ஏடீ !
அன்றாலின் கீழிருந்தங்கு
அறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும்
கூட்டோடே, சாழலோ !

Civan a guru and an avenger too.

Obj :—Well to the four, the fourfold mystic scrolls' deep sense,
That day beneath the banyan tree, and virtue He reveal'd ; behold, My Dear,

Ans :—That day, beneath the banyan tree, though virtue He revealed,
He utterly destroyed the cities three : behold, Caralo ! 16

அம்பலத்தே கூத்தாடி
அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று
நண்ணுமது என்?ஏடீ!
நம்பனையும் ஆமாகேள்;
நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாஎன்று
ஏத்தின,காண், சாழலோ!

A mendicant

Obj :—In the sacred hall He dances, and
wanders abroad to beg for alms ;
This homeless mendicant shall we
approach as God ? How so,
My Dear !
Ans :—Hear thou the nature of this sacred
mendicant ! Him Vedas four
know not
But they've invok'd Him Lord and
Ican, praising loud ; behold,
Caralo ! 17

சலமுடைய சலந்தரன்றன்
உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்குஅன்று
அருளியவாறு என்?ஏடீ!
நலமுடைய நாரணன்றன்
நயனம்இடந்து அரனடிக்கீழ்
அலராக இடஆழி
அருளினன்காண், சாழலோ!

The Disc.

Obj :—Why He smote down Jalandharan,
the monster of the sea, that disc
To Naranan, the good, in grace He
gave ; how's that, My Dear ?

Ans :—Since Naranan, the good, dug out
an eye, and laid at Aran's foot,
As flower, to him in grace the disc
He gave ; behold, Caralo ! 18

அம்பரமாம் புள்ளித்தோல்;
ஆலாலம் ஆரமுதம்;
எம்பெருமான் உண்டசதிர்
எனக்கறிய இயம்பு,ஏடீ !
எம்பெருமான் ஏதுடுத்தங்கு
ஏதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத்
தன்மையன்காண், சாழலோ!

Obj :—His garment is the spotted hide;
His food the fiery poison dark.
Is this our Peruman's great skill?
Expound that I may know, My Dear

Ans :—Our Peruman;- whatever
He wore there,-Whate'er He ate,-
The greatness of His nature none
can know; behold, Caralo! 19

அருந்தவருக்கு ஆலின்கீழ்
அறமுதலா நான்கினையும்
இருந்தவருக்கு அருளுமது
எனக்கறிய இயம்பு,ஏடீ!
அருந்தவருக்கு அறமுதல்நான்கு
அன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை
தெரியாகாண்,சாழலோ!
திருச்சிற்றம்பலம்

Virtue and true philosophy must be divinely taught

Obj :—To saints of goodness rare,
beneath the Al, virtue and all the
Four he taught;
Explain to me the grace He showed.
seated with them, My Dear!

Ans :—Had he not taught that day in grace,
the worthy saints virtue and all
the Four,
To noble souls this world's nature
had n'eer been known! behold, Caralo!

குறிப்புரை

1. பொங்கு - சீறுகின்ற. மறை - வேதம். ஏழை - பெண்ணே; தோழீ. 2. துன்னம் - தைத்த துணி. மன்னு கலை-ஞானநூல். சரடு - அரைக்கயிறு. 3. தனியன் - தனியனாக இருப்பவன். காயில் - கோபித்தால். 4. அநங்கன் - மன்மதன். வயனம்-அடையாளம். வடு - புண்ணின் தழும்பு 5. எச்சன் - வேள்வியிற்றும் குரு. எச்சன் - தக்கன். 6. சலம் - கோபம். ஆங்காரம் - செருக்கு. 7. மற்றொருத்தி - கங்கை. சலம் - நீர். பிலமுகம் - பாதாளம். 8. கோலாலம் - பேரொலி. சதிர் - பெருமை, திறமை. 9. தென்பால் - தென்றிசைக்கண். யோகு - யோகம். வீடுவர் - அழிவர். 10. அந்தம் - முடிவு. உந்து - உயர்ந்த. 11. நங்காய் - பெண்ணே! கங்காளம் - முழு எலும்பு. காலம் - முடிவு காலம். 12. ஊண் - உண்ணும் கலம். பதி - இடம் வழி-பரம்பரை. 13. தி வேட்டல் - மணத்தல். கலை - நூல். 14. பணை - வயல். நட்டம் - நடனம். ஊட்டாம்-ஊட்டப்படும் உணவு. 15. கடம்-மதசலம். பரிமா-குதிரை. 16. நால்வர் - சனகாதி நால்வர். ஆல் - ஆலமரம். கூட்டோடு - அடியோடு. 17. பலி-பிச்சை. நம்பன்-நம்பத்தக்கவன்: சிவன். தேவன் - கடவுள். 18. சலம்-வஞ்சகம். தடிந்த - அழித்த. ஆழி - சக்கரம். நயனம் - கண். இடந்து - தோண்டி. 19. அம்பரம் - ஆடை. சதிர் - திறமை. 20. அருந்தவர் - சனகாதி நால்வர். அறம் முதலா நான்கு - அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

சிவநாமம்

சிவசிவ என்கிலர் தீவினை யாளர் ;
சிவசிவ என்றிடத் தீவினை மாளும் ;
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர் ;
சிவசிவ என்னச் சிவகதி தானே.

—திருமந்திரம்

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க ;
மலிவளஞ் சுரக்க ; மன்னன்
கோன்முறை அரசு செய்க ;
குறைவிலாது உயிர்கள் வாழ்க ;
நான்மறை அறங்கள் ஓங்க ;
நற்றவம் வேள்வி மல்க ;
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக ; உலக மெல்லாம்.

—கந்தபுராணம்

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்துத் தலைவர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்
அவர்கள் நிறுவிய தருமங்கள்

தொடர் எண்	தரும விவரம்			மூலதனம் ரூபாய்
1.	திருமுறை வளர்ச்சிக்காக	27	தருமங்கள்	4,06,000
2.	கல்வி அபிவிருத்திக்காக	48	ஷை	6,04,200
3.	சைவசித்தாந்தம் பரப்ப	7	ஷை	1,56,000
4.	அன்னதானம் செய்ய	98	ஷை	23,69,000
5.	வைத்தியம் செய்ய	5	ஷை	1,22,500
6.	பொது தருமம்-ஸ்நான கட்டம், அகதி நன்கொடை, தண்ணீர்ப் பந்தர் முதலியன 54 தருமங்கள்			5,05,745
	ஆகத் தருமங்கள் 239-க்கு			41,63,455

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி—57.

		ரூ.	நபை.
21	கந்தர் அலங்காரம் குறிப்புரை ...	0	25
22	கந்தர் அநுபூதி டிை ...	0	13
23	கந்தர் கலிவெண்பா-மூலம் மட்டும் ...	0	6
24	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலம் ஹிந்தி	0	50
25	சகலகலா வல்லி மாலை - ஆங்கிலமும் ஹிந்தியும் கூடியது ...	0	6
26	திருக்குறள்-அறத்துப்பால்-ஹிந்தி மொழிபெயர்ப்பு ...	1	50
27	டிை பொருட்பால் டிை டிை ...	2	50
28	டிை காமத்துப்பால் டிை டிை ...	1	0
	டிை மூன்றுபுத்தகங்களும் சேர்த்து ...	4	0
29	பெரிய புராணம் உரைநடை ...	2	0
30	திருவிளையாடற் புராணம் உரைநடை	2	25
31	குமரகுருபர சுவாமிகள் சரித்திரப் பட விளக்கம் ...	0	50
32	அபிராமி பட்டர் பிரபந்தம் ...	0	31
33	திருக்கயிலைத் திருமுறை ...	0	37

மேலேகண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள் :—

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில்,
ஸ்ரீவைகுண்டம்.

2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.
"தியாகராஜ விலாசம்"
53, பிள்ளையார்கோவில் தெரு, திருவட்டீசுவரன்
திருவல்லிக்கேணி, சென்னை-5 [பேட்டை,

3. பன்னிரு திருமுறை மன்றம், தெற்கு ஆடி வீதி,
மதுரை.

குறிப்பு :— டிை விற்பனைத்தொகை "குமரகுருபரன்" பத்திரிகையைச் சாரும்.

உ

"குமர குருபரன்"

(தமிழ்த் திங்கள் வெளியீடு)

ஸ்ரீவைகுண்டம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடாலயத்திலிருந்து

மாதந்தோறும் வெளிவருகிறது

★

இது

சைவசித்தாந்தம், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
பிரபந்தம், பன்னிரு திருமுறை ஆராய்ச்சி,
இலக்கியம், பிறமொழிகள், கலாசாரம்
சம்பந்தமான கட்டுரைகள் கொண்டது

★

நிர்வாக ஆசிரியர் :

T. M. குமரகுருபரன் பிள்ளை, B. A. B. L.,

(நிரந்தரத் தலைவர் குமரகுருபரன் சங்கம்)

மானேஜிங் டிரஸ்டி, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடம்

ஸ்ரீவைகுண்டம்

வருட சந்தா ரூ. 1-8-0 தனிப்பிரதி 0-2-0

இம்பீரியல் அச்சகம், திருச்சிராப்பள்ளி—57.